# பெரியாழ்வார் திருமொழி 4-1
## கதிராயிரம்

(ஸர்வேஸ்வரனைக் காண வேணுமென்று தேடுவார் சிலரும்,
கண்டார் சிலருமாகக் கூறுதல்)

328 ***** கதிராயிரம் இரவி * கலந்தெரித்தால் ஒத்த நீள் முடியன் *
எதிரில் பெருமை இராமனை * இருக்குமிடம் நாடுதிரேல் **
அதிரும் கழற்பொரு தோள் * இரணியன் ஆகம் பிளந்து *
அரியாய்
உதிரம் அளைந்த கையோடிருந்தானை * உள்ளவா கண்டாருளர் (1)

329 நாந்தகம் சங்கு தண்டு * நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரம் *
ஏந்து பெருமை இராமனை * இருக்குமிடம் நாடுதிரேல் **
காந்தள் முகிழ் விரல் சீதைக்காகிக் * கடுஞ்சிலை சென்றிறுக்க *
வேந்தர் தலைவன் சனக ராசன் தன் * வேள்வியில் கண்டாருளர் (2)

330 கொலை யானைக் கொம்பு பறித்துக் * கூடலர் சேனை
பொருதழிய *
சிலையால் மராமரம் எய்த தேவனைச் * சிக்கென நாடுதிரேல் **
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று * தடவரை
கொண்டடைப்ப *
அலையார் கடற்கரை வீற்றிருந்தானை * அங்குத்தைக்
கண்டாருளர் (3)

331 தோயம் பரந்த நடுவு சூழலில் * தொல்லை வடிவு கொண்ட *
மாயக் குழவியதனை நாடுறில் * வம்மின் சுவடுரைக்கேன் **
ஆயர் மடமகள் பின்னைக்காகி * அடல்விடை ஏழினையும் *
வீயப் பொருது வியர்த்து நின்றானை * மெய்ம்மையே
கண்டாருளர் (4)

332 நீரேறு செஞ்சடை நீலகண்டனும் * நான்முகனும் முறையால் *
சீரேறு வாசகஞ்செய்ய நின்ற * திருமாலை நாடுதிரேல் **
வாரேறு கொங்கை உருப்பிணியை * வலியப் பிடித்துக் கொண்டு
தேரேற்றி * சேனை நடுவு போர் செய்யச் * சிக்கெனக்
கண்டாருளர் (5)

333 பொல்லா வடிவுடைப் பேய்ச்சி துஞ்சப் * புணர் முலை வாய்
மடுக்க
வல்லானை * மாமணி வண்ணனை * மருவுமிடம் நாடுதிரேல் **

பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு * பௌவம் ஏறிதுவரை *
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே * இருந்தானைக் கண்டாருளர் (6)

334 வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச் சக்கரம் * ஏந்து கையன் *
உள்ளவிடம் வினவில் * உமக்கு இறைவம்மின் சுவடுரைக்கேன் **
வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் * தேர்மிசை முன்பு நின்று *
கள்ளப் படைத் துணையாகிப் * பாரதம் கைசெய்யக் கண்டாருளர் (7)

335 நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற * அரசர்கள் தம்முகப்பே *
நாழிகை போகப் படை பொருதவன் * தேவகி தன் சிறுவன் **
ஆழி கொண்டு அன்று இரவி மறைப்பச் * சயத்திரதன் தலையை *
பாழிலுருளப் படை பொருதவன் * பக்கமே கண்டாருளர் (8)

336 மண்ணும் மலையும் மறிகடல்களும் * மற்றும் யாவுமெல்லாம் *
திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவனைச் * சிக்கென நாடுதிரேல் **
எண்ணற்கரியதோர் ஏனமாகி * இருநிலம் புக்கிடந்து *
வண்ணக் கருங்குழல் மாதரோடு * மணந்தானைக் கண்டாருளர் (9)

337 * கரியமுகில் புரைமேனி மாயனைக் * கண்ட சுவடுரைத்து *
புரவிமுகம் செய்து செந்நெலோங்கி * விளைகழனிப் புதுவை **
திருவிற்பொலி மறைவாணன் * பட்டர் பிரான் சொன்ன மாலை பத்தும் *
பரவு மனமுடைப் பத்தருள்ளார் * பரமனடி சேர்வர்களே (10)